1

ஆர்வமும் ஆர்வமின்மையும்

ஏதோ ஒரு ஆர்வத்தின் காரணமாகத்தான் இந்த இயற்கை, இந்த உயிரினங்கள் படைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயம் அந்த காரணகர்த்தா மனம் முழுக்க ஒரு ஆர்வத்தை கொண்டிருக்க வலுவான காரணங்கள் இருக்கிறது. காரணம் படைப்பில் பல விஷயங்களாக அழகு நிதானமாக உருவாக்கப்பட்டு படைக்கபட்டிருக்கிறது.

இயற்கையின் அழகுகள் படைத்தவனின் ஆர்வம், மிகுந்த ரசனையை எக்காலத்திலும் பறைசாற்றி கொண்டு இருக்கின்றது. படைத்தவனுக்கு உள்ள ஆர்வம் போல், பூமியில் வாழும் பாமரனுக்கும், பல ஆர்வங்கள் அவன் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கிறது. பூமியில் மனித ஆர்வமே விஞ்ஞானப் படைப்புகளைப் படைத்தது. அந்தப் படைப்புகள் மனித வாழ்க்கையை நவீனப் படுத்திவிட்டது.

எதிலும் ஆர்வம் இல்லை என்றால் எக்காரியமும் முழுஉருவம் பெறாது. ஆர்வமின்றிச் செய்யப்படும் செயல்கள் பல பலன்கள் அத்தனை கொடுப்பதில்லை. ஆர்வம்தான் மனிதனுக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. அந்த ஊக்கமே மனிதனை, தடை தாண்டிப் பயணிக்கச் செய்கிறது. ஆர்வமுள்ளவன் வாழ்க்கை தனித்துவம் பெறுகிறது.

காலம் மாற மாற மனித சிந்தனை விரிந்து, மிக ஆழமாய்ப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. சிந்தனை என்பது இயல்பாய் மனிதனுக்குத் தோன்றக் கூடியது. அந்தச் சிந்தனை பழையன கழித்து பல புதியனவைகள் கொண்டு இருக்கிறது. அந்தப் புதிய சிந்தனைத் தோன்றல்கள் மனித வாழ்க்கையை மாற்றி அமைக்கின்றது.

சிந்தனையே ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இருக்கின்றது. ஆர்வத்தின் விளைவே சாதனையாகிறது. பூமியில் எல்லா மனிதச் சாதனைகளும் ஆர்வத்தைப் பின்புலமாகக் கொண்டதாய் இருக்கிறது. ஆர்வம் கொண்ட மனிதன்தான் புதிய விஷயங்களை, கற்றுக் கொள்கிறான். ஆர்வம் இல்லாத மனிதன் வாழ்க்கை மிகுந்த சோம்பல் நிறைந்ததாய் இருக்கிறது. சோம்பல் நிறைந்தவன் வீட்டு அடுக்களையில் பூனைகளும் உறங்கத் தொடங்கிவிடும்.

இளமையில் உலகைப் பற்றிய ஆர்வம் அதிகமிருக்கும். அந்த ஆர்வம் பல கனவுகளை மனிதனுக்கு உற்பத்தி செய்யும். அந்தக் கனவின் விளைவாக மனிதன் வாழ்க்கையோடு ஈடுபாட்டுடன் விளங்குகிறான். அந்த ஈடுபாடு பல கனவுகள் நனவாகுவதற்குக் காரணமாய் அமைந்துவிடுகின்றது. நதி உற்பத்தி ஆன இடத்திற்கு மீண்டும் திரும்புவதில்லை, அதேபோல் முடிந்த இளமை தொடர்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இளமையில் ஆர்வம் மிகுந்தவன் முதுமையில்தான் ஆர்வத்தின் சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்கிறான்.

ஆர்வம்தான் மனிதனுக்குத் தேடலை ஏற்படுத்திக் கொடுக்கிறது. தேடல் நிறைந்த மனிதன் என்றும் வாழ்க்கையில் விரையம் ஆகிவிடுவதில்லை. தேடல் மிகுந்த மனிதன் தான் உட்பட்டப் பல புதிய விஷயங்களைக் கண்டுபிடித்து வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்கிறான்.

மனிதனுக்குக் கற்றுக் கொள்ள ஆர்வம் மட்டும் இருந்தால், இந்தப் பூமியில் கற்றுக்கொள்ளப் பல விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. இந்தப் பூமி பல அற்புத உண்மைகள் கொண்டது. அந்த அற்புத உண்மைகளைக் கண்டறிய மேலான ஆர்வம் மட்டுமே அடிப்படையாக மனிதனுக்குத் தேவைபடுகிறது.

ஒரு நல்ல காரியத்தைத் தொடங்குவதற்கும் முடிப்பதற்கும் இடைவிடா செயல் சார்ந்த ஆர்வம் மட்டுமே மனிதனுக்குத் துணை புரிகிறது. எதிலும் ஆர்வம் இல்லாத மனிதன்

வாழ்க்கையின் எந்த உறவுகளையும் தக்க வைத்துக் கொள்ள முடியாது. உறவுகளே வாழ்க்கையையும், மனதையும் பலப் படுத்துகிறது.

சிலருக்கு சில விஷயங்களில் ஆர்வம் இருக்கும். ஆனால், முழுமையான ஈடுபாடுடன் கொண்ட செயல் இல்லாத காரணத்தினால், அந்த மனிதர்கள் கொண்ட ஆர்வம் முழு வடிவமான காரியம் ஆக உருப்பெறாது. ஆர்வம் மட்டுமேதான் வாழ்க்கையை உயிர்ப்புடன் என்றும் வைத்திருக்கிறது.

பல கண்டுபிடிப்பாளர்கள் ஆர்வத்தின் காரணமாகவே பூமியில் பல விஷயங்களைச் சாதிக்கின்றார்கள். பல மனிதர் களின் வாழ்க்கைப் பாதையை அவர்களின் ஆர்வம்தான் வகுத்து உருவாக்கிக் கொடுக்கிறது. நேரங்கள் மாறுவதுடன், மாறிய நேரங்கள் மனிதர்களை மாற்றி அமைக்கின்றது. அப்படி மனிதன் மாறும்போது அவனின் ஆர்வங்களும் மாறிப் போகின்றது.

எல்லோருக்கும் வெற்றி தேவைப்படுகிறது. அப்படி தேவைப்படும்போது, மனிதனுக்கு அதற்குண்டான அடிப்படை ஆர்வமும் தேவைப்படுகிறது. ஆர்வமில்லாத மனிதன் வெற்றியின் இலக்கை எட்ட முடியாது. முயலுக்குக் கொம்பு உருவாக்குவது போல்தான் வெற்றியுடன் போராடுவது என்பது. ஆகையால் அந்தப் போராட்டங்கள் பல சலிப் பைத்தான் தரும். சலித்துப் போன மனிதர்கள் விடாமுயற்சி யைக் கைவிட்டு ஆர்வத்தையும் இழந்து விடுகின்றனர்.

புத்தியுள்ள காரியம் என்றும் விரையம் ஆகாது. புத்தி கெட்ட காரியங்கள்தான் வாழ்க்கையைச் சீரழித்து, வாழ்க்கையை நஷ்டப்படுத்தி, முடிவில் பிறப்பை விரையம் ஆக்கிவிடும். முடியாத காரியம் சிலவகைகளைத் தவிர அனைத்தும் பூமியில் மனிதனால் முடிகின்ற காரியங்கள்தான். அந்தக் காரியங்களை முடிக்க மனிதனுக்கு அளப்பரிய ஆர்வம் மட்டுமே தேவைபடுகிறது.

ஆர்வம் கொள்வோம்! எண்ணியதை அடைவோம். ✪

2 திறமையும் திறமையின்மையும்

திறமை மிகுந்த மனிதர்கள் எளிதில் சோர்ந்துவிட மாட்டார்கள். காரணம், அவர்கள் திறமை அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருக்கும். திறமை என்பது செயலின் நேர்த்தியான பரிமாணம். இந்த நேர்த்தி கிடைக்கப் பெற்றவர்கள் வாழ்வு எந்த நிலையிலும் வீழ்ச்சியடைந்து விடாது.

நமது திறமைதான் நம்முடைய நல்வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி. எந்தச் செயலையும் திறம்படச் செய்தால் நல்ல பலனைக் கொடுக்கும். திறமையற்ற வாழ்க்கை, பல இடங்களில் அவலத்தைச் சந்திக்க நேரிடும். அறிவும், ஆர்வமும் ஒன்றிணைந்தால்தான் ஒரு மனிதனிடம் இருந்து திறமை பிறக்கும். அறிவும், ஆர்வமும் ஒரு நேர் கோட்டில் பயணித்தால்தான், அதில் திறமை வெளிப்பட்டு இலட்சியப் பாதையைக் கடக்க முடியும்.

திறமை மனிதனுக்குத் தன்னம்பிக்கையும் தைரியத்தையும் கொடுக்கும். தனித் திறமையில்தான் மனிதர்களின் தனித்துவம் சரியாக வெளிப்படும். ஊக்கம் உள்ள மனிதர்கள் பின்னே, அவர்கள் திறமைதான் உந்து சக்தியாய் இருந்து அவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கும். காலம் திறமைகளை அங்கீகரித்து கௌரவிக்கத் தவறுவதில்லை. அளவில் கூடிய மனிதத் திறமைகள்தான் மானுட சமூகத்தை என்றும் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

திறமை குறையக் குறைய வாழ்வின் தரம் குறைகிறது. திறமைதான் வாழ்க்கைக்கு சிறந்த தரத்தைக் கொடுக்கவல்லது. வல்லமையான வாழ்க்கை திறமையால்தான் உறுதி செயயப்படுகின்றது. திறமைகளைக் கூட்டிக் கொள்பவர்தான் போட்டி உலகில் நிலைத்துப் பிழைக்க முடியும். திறமையில் குறைந்தவர்களுக்கு இந்த உலகம் விலாசத்தைச் சரியாகக் கொடுப்பதில்லை.

ஒரு மனிதனின் அறிவு அவன் திறமைகளில்தான் வெளிச்சம் பெறுகிறது. திறமையைக் கைவிட்டால் வாழ்க்கையும் கைவிட்டு விடும். நல்ல திறமைகள் வாழ்க்கையின் பரிசினைப் பெறுகின்றது. திறமைகளுக்குள்தான் பூமியில் யுத்தமே நடக்கிறது. சலியாத திறமைகள் ஒருநாள் வெற்றிக் கோட்டையை எட்டி நிச்சயம் தொடும்.



முட்டாள்களுக்கு திறமைகள் கைகூடி வருவதில்லை. ஆகையால், அவர்கள் வாழ்க்கை சிலந்தியில் மாட்டிய உயிராக வினை பலி ஆகிவிடுகின்றார்கள். ஒரு மனிதன் மரணத்திற்குப் பின் அவனின் வாழ்நாள் திறமைகள்தான் எக்காலத்திலும் மரணிக்காமல் உயிர் வாழ்ந்து கொண்டு, பூமியில் சரித்திரமாய் நின்று நிலைக்கிறது. திறமை பெற்ற மனிதன் யார் முன்னும் அஞ்சி அடிபணிந்து வாழ்வதற்கு சம்மதிக்கமாட்டான். உடலுக்கு முகம் விலாசமாய் இருப்பது போல் வாழ்க்கைக்குத் திறமைதான் விலாசமாய் இருக்கிறது. புகழ்பெற்ற மனிதர்கள் எல்லாம் தனித் திறமை பெற்றவர்களாக விளங்குவதைக் கண்கூடாகப் பூமியில் காணலாம்.

பரீட்சையில் நல்ல மதிப்பெண் பெறுவதும் திறமை யால்தான் முடிகிறது. நல்ல மதிப்பெண்களே வாழ்க்கைக்கு சிறந்த மதிப்பினை அமைத்துக் கொடுக்கின்றது. பல நாள் பொய் சொல்லிப் பிழைக்கும் மனிதன் எத்தன் எனப்படுவான். எத்தர்களை உலகம் எட்டி உதைக்குமே தவிர, வாரி உச்சி மோர்ந்து அணைத்துக் கொள்ளாது. திறமை குறைந்தவர்கள் எத்திப் பிழைக்கவே பேரார்வம் கொள்வார்கள்.

நம்பிக்கையைக் கைவிடாமல் இருக்க திறமைதான் ஒவ்வொரு மனிதனுக்கும் பலமாய் அமைந்து உள்ளது. பல நாள் சோதனைகள் ஒரு நாள் முடிந்துவிடும். திறமையால் தான் கொண்ட நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால், பல நாள் கஷ்டம் ஒரு நாள் நல்ல விடியலை நிச்சயம் தந்துவிடும். மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுதான் விதி எனப் பொருள்பட சொல்லபடுகிறது. திறமைகளால் வாழ்க்கையைச் செலவு செய்தால், நல்ல விதி கூட வரவாய் அமைந்துவிடும்.

பூமியின் அடியில் கண்ணுக்குத் தெரியாமல் ஓடித் கொண்டு இருந்த பெட்ரோலையும், டீசலையும் மனிதன்

தனது விடாமுயற்சியின் திறமையால் தோண்டி எடுத்துத் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டதைப்போல், ஒவ்வொரு மனிதன் உள்ளும் கண்ணுக்குத் தெரியாத பல திறமைகள் ஒளிந்து கிடக்கிறது. அந்தத் திறமைகளைக் காலத்தே கண்டுபிடித்து வெளிப்படுத்துவதில், அந்த மனிதன் பங்குதான் அதிகமிருக்கிறது.

திறமை மனிதனை ஏமாற்றி விடாது. திறமையின்மைதான் மனிதனை ஏமாற்றிவிடும். எங்கே திறமை குறைகிறதோ அங்கே வளமும் குறைந்துவிடுகிறது. வளம் குறைந்த வாழ்க்கை, மனிதனுக்கு நரகத்தின் பாடங்களைத் தவறாமல் போதிக்கின்றன. திறமை என்பது தனிப்பெரும் செல்வம். அந்த செல்வத்திற்கு தரித்திரம் தண்டனையாக அமைந்துவிடாது.

திறமையில் கூடிய மனிதன் வாழ்வின் உச்சத்தை நிச்சயம் தொடுவான். திறமை சரியான சந்தர்ப்பத்தை அடையாவிட்டால், அந்த மனிதனின் விதி அந்த மனிதனை வீழ்த்தித் தோற்கடித்துவிடும். வாழ்க்கை என்ற பரமபதத்தில் விதி என்ற பாம்பு கடித்தாலும், தனது திறமையால் மனிதர்கள் தனக்கான ஏணிகளை, அமைத்துக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் சிறந்ததை அடைய, அவனின் இடை விடாத ஆர்வமே காரணமாய் இருக்கிறது. அந்த ஆர்வமானது பல திறமைகளை உன்னிப்பாய் தனக்கு தானே வளர்த்துக் கொள்ளும். அந்தத் திறமைகள் ஒன்று கூடிதான் நினைத்த சிறந்ததை தனக்குப் பெற்றுத்தரும். வாழ்க்கை என்பது வேடிக்கையும் அல்ல, அது பல நாள் வாடிக்கையும் அல்ல. வாழ்க்கை என்பது பலப்பரீட்சை. அதில் திறமை பலமாய் இருந்தால்தான் வெற்றியின் விலாசத்தை அடைய முடியும்.

திறமையை வளர்த்துக் கொள்வோம்
வாழ்க்கையை வென்றெடுப்போம்.

3 அன்பும் வெறுப்பும்

பூமியில் பிறந்த எல்லா ஜீவராசிகளுக்கும் அன்பு என்ற உணர்வு இருக்கின்றது. பறவைகளும், மிருகங்களும்கூட தாயன்பை எக்காலத்திலும் விடாது. தன் குட்டிகளிடமும், குஞ்சுகளிடமும் காட்டுகின்றன. மனிதன் மட்டும்தான் அன்பை வாழ்க்கை முழுவதிலும் காட்டும் ஜீவனாக உலகத்தில் இருக்கின்றான். அன்பு என்பது மானசீகமானது. அது மனம் இருந்தால்தான் பிறக்கும்.

அன்பு அற்ற இதயங்கள் உணர்வுகள் இறந்து மரத்துப் போய் இருக்கும். அந்த மரத்துப் போன இதயங்கள் இயந்திரத் தனமாய்தான் உறவுகளை நிர்வகிக்கும். அன்பு குற்றங்களை மன்னித்து விடும். அன்பு அடிப்படையாய் இருந்தால்தான் நேசங்கள் உயிர்ப்புடன் இருக்கும். வெறுப்பு, அன்பு இறக்கப் போய்தான் உருவாகிறது. வெறுப்பு விரோதத்தை உருவாக்கும். அன்பு அக்கறையை உருவாக்கும்.

நம்மை எல்லோரும் விரும்பமாட்டார்கள். சிலர் நம்மை வெறுக்ககூடச் செய்யலாம். எல்லோரிடமும் அன்பை செலுத்துவது என்பது, நம்மில் பலருக்கு எளிதான காரியமாய் இல்லை. நாம் தூய அன்பை பிறருக்குக் கொடுப்பவராய் இருக்கவேண்டும். அன்பு என்பது கொடுத்தால்தான் திரும்பக் கிடைக்கும். பிறர் நம்மை வெறுத்தால் நாம் அவர் மீது அன்பை செலுத்த மாட்டோம்.

பொறுப்பற்ற பிள்ளைகள் பொறுப்பைப் பெறுவதும், பொறுப்புள்ள மனிதர்கள் பொறுப்பு தவறுவதும், வழக்கமாக மானுட வாழ்வில் நடக்கும் ஒரு விஷயம்! பொதுவாக வாழ்க்கையையும் பிறரையும் வெறுப்பவர்கள், எந்தப் பொறுப்பையும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். காரணம், அவர்களை எந்த அன்புச் சங்கிலியும் வாழ்க்கையோடு பிணைத்திருக்காது.

வீட்டை விட்டு வெளியே வந்தால் உலகத்தில் ஆயிரம் பிரச்சனைகள் உள்ளது. வாழத் தாயராய் ஆன மனிதன் அனைத்துப் பிரச்னைகளையம் எதிர்கொண்டாக வேண்டிய வாழ்க்கைக் கட்டாயம் பல மனிதர்களுக்கு உள்ளது. இந்தக் காரணங்களால் அடுத்த ஜீவன் மீதும் பிறர் மீதும் காட்ட வேண்டிய அன்பின் சதவிகிதம் குறைந்து போய்விடுகிறது. ஒரு மனிதனிடம் இருந்து அன்பு இறந்து போய்விட்டால் அந்த மனிதன் மிருகப் பண்புகளைப் பெறுகிறான்.

இயற்கை எல்லா மனிதர்களுக்கும் எல்லா பலமும் கொடுத்து விடுவதில்லை. மனிதன் பெரும்பாலும் பல பலஹீனங்களுடன் தான் பிறப்பெடுத்து இருக்கிறான். சிலரை அவன் பலஹீனம் வாழ்க்கையில் வீழ்த்தி விடுகிறது. அதில் சில சதவிகிதத்தினர் மட்டும்தான் பலஹீனங்களைத் தாண்டி தங்கள் சொந்த பலத்தால், வாழ்க்கையில் எழுந்து பிரகாசித்து வாழ்வை முடிக்கின்றனர். வாழ்வில் பலம் பெற்றவர்கள் எல்லாம் அன்பில் பலம் பெற்று விடுவதால், அவர்கள் வாழ்க்கை ஒரு விதமான நிறைவுடன் பூமியில் நிறைவு பெறுகிறது.

வெறுப்பு என்பது அக்னியை உருவாக்கக் கூடியது. அந்த அக்னியான வெறுப்பு உறவுகளை எரித்துக் கருக்கிவிடும். மோசமான செயல்கள் பெரும்பாலும் வெறுப்பினால்தான் உருவாகின்றது. திட்டுவதும், அடிப்பதும், கொலை செய்வதும்

புறக்கணிப்பதும் வெறுப்புகளினால்தான் உருவாகிறது. காரணமே இல்லாமல் சிலர் சிலரை வெறுப்பார்கள். ஆனால் ஒருவரை வெறுப்பதற்கு அடிப்படையான காரணங்களும் இருக்கிறது. பல நேரம் எந்தத் தவறும் செய்யாமல், அந்த வெறுக்கக் கூடிய காரணங்கள் மனிதனுக்குள் உருவாகி விடுகின்றன.

வெறுப்புகளினால் சிநேகங்கள் கூட பகை ஆகி விடுகின்றது. இந்தப் பகை மனதினுள் மனிதனுக்கு வன்மத்தை உற்பத்தி செய்துவிடுகிறது. இந்த வன்மம் பழிவாங்கத் துடிக்கிறது. பழிவாங்கிய பின்புதான் இந்த வன்மத்தின் தீவிரம் மனிதனுக்கு குறைய தொடங்குகிறது. வெறுப்பு அன்பை அடியோடு அழித்து, மனதை அன்பற்ற பாலைவனமாக ஆக்கிவிடும். அந்தப் பாலைவனத்தில் இரக்கம், நன்றி, கருணை என்ற எந்த ஈரமும் இருக்காது.

ஈரமற்ற மண்ணில் விளைச்சல் எப்படி இருக்கும்? அன்பு விளைச்சல் இன்றி உறவுகளும் பிரிந்து வாழ்க்கையும் சூன்யமாகிவிடுகிறது. பொல்லாத வாழ்க்கையை மனிதனுக்கு வெறுப்புதான் ஏற்படுத்திக் கொடுத்துவிடுகின்றது. உறவுகளின் அடர்த்தி அன்பு அக்கறை இன்றி மிகவும் குறைந்து விடும். அந்தக் குறைவு வாழ்க்கைக்குப் பலம் சேர்க்காது.

அன்புதான் மனதைக் கனியச் செய்கிறது. கனிந்த மனது கனிவான செயல்களை வாழ்க்கையில் செய்கிறது. அன்பால் உயர்ந்த மனிதர்கள் உள்ளத்தில் நிச்சயம் உயர்ந்திருப்பார்கள். அன்பு குறைந்த மனிதர்களே சிறிய மனிதர்கள் ஆகின்றார்கள். வெள்ளை உள்ளத்தில் அன்பு அதிகமிருக்கும். காரணம் சூது, வாதுகளால் அந்த மனம் கறுத்து அன்பை இழந்திருக்காது.

போட்டிகளால் நிறைந்தது உலகம். இந்தப் போட்டிகளினால் மனிதர்களுக்குப் பொறாமையும் வந்துவிடுகிறது. எப்பொழுது பொறாமை அதிகரிக்கிறதோ அப்பொழுது

அன்பு குறைந்து விடுகிறது. அன்பு குறைந்து விட்டால் கருணை இரக்கமும் காணாதுபோய் விடுகின்றது. கருணை, இரக்கம் இல்லாமல்தான் கொண்ட உறவுகள் எல்லாம் போலியாக இருக்கின்றது.

ஒருவருக்குத் தூய அன்பு கிடைப்பது என்பதுதான் அந்த மனிதன் சரியாக வாழ்ந்ததற்கு அர்த்தம் ஆகிறது. வாழ்க்கை வசதியோடு முடிந்து போவதில்லை. வசதி தாண்டி வாழ்க்கையை அன்புதான் ஏற்பாடு செய்து கொடுக்கிறது. உற்ற அன்பானது வாழ்க்கையின் உயர்வில் கூட இருப்பது போல், அது வாழ்வின் தாழ்விலும் விடாமல் உள்ளம் மெலிந்து விடாமல், அன்பால் உறவைத் தாங்கிப் பிடிக்கிறது. வாழ்க்கையின் சாதனை பல அன்பு உள்ளங்களை எந்த எதிர்பார்ப்பும் இன்றி சம்பாதித்துக் கொள்வதில்தான் இருக்கிறது.

அன்பால் வாழ்வோம்... அனைத்தும் பெறுவோம். ✪

4

மயக்கம்

மதி மயக்கம் மனிதர்களுக்குப் பொதுவானது. ஏதாவது ஒரு பொருள் கொண்டு மனிதன் மயங்கித்தான் கிடக்கின்றான். ஆணுக்கு பெண் மயக்கம், பெண்ணுக்கு ஆண் மயக்கம். நடிகருக்கு ரசிகன் மயக்கம், தலைவனுக்குத் தொண்டன் மயக்கம், பக்தனுக்குக் கடவுள் மயக்கம்.

மயக்கம் என்பது அறியாமை. சில உண்மைகள்தான் மயக்கத்தைத் தெளிய வைக்கும். உண்மை தெரியாமல் கால மெல்லாம் மயங்கியே மரித்து விடுகிறான் மனிதன். மயக்கம் கனவுகளை உற்பத்தி செய்கிறது. கனவுகள் கற்பனையோடு வாழ்கின்றது. மனிதனின் நிறையக் கற்பனைகள் நிஜம் ஆவதில்லை. கற்பனையோடு கனவுகள் காலாவதி ஆகி விடுகின்றது.

காலம் எப்போதும் யாரிடமும் மயங்கிக் கிடப்பதில்லை. அதனால் மனிதனுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிக மாக யாருக்கும் காலம் கொடுத்துவிடுவதில்லை. மயக்கம் என்ற பித்து தெளிந்தால்தான் அவன் முழு மனிதன் ஆகின்றான்.

வெளிச்சத்தில் வாழ்பவர்களைப் பார்த்து வெளிச்சத்தில் இல்லாதவர்கள் மயக்கம் கொள்கின்றனர். அந்த மயக்கம் பலருக்கு எளிதில் தீருவதில்லை. நல்ல அறிவு மயக்கத்தில் வேலை செய்யாது. அறிவு வேலை செய்யாமல் போவதால், தெளிவான பார்வை மனிதனுக்குக் கிடைக்காமல் போய்

விடுகின்றது. தெளிவான பார்வை கிடைக்காத காரணத்தால் வாழ்க்கை பல திசைகள் மாறிப் பயணம் செய்கிறது. வரும் தெளிவுதான் வாழ்க்கைப் பயணத்தை சீர்படுத்துகிறது.

ஆடு மாடுகள்தான் பூமிக்கு ஏதோ வந்து போகின்றன. மனிதனும் பூமிக்கு எதோ வந்து போபவன் அல்ல. மனிதன் ஒரு சாதனையாளன். எதுவும் சாதிக்காமல் போவோர்தான் பூமிக்கு ஏதோ வந்து போனவர்களாய் ஆகி விடுகின்றனர். மயக்கம் தெளியாதவர்களும் பூமிக்கு ஏதோ வந்து போனவர்களாய்தான் ஆகிவிடுகின்றனர்.

புறமயக்கம் ஒரு போதை வஸ்து போன்றது. அந்த போதைக்கு மனிதன் அடிமைபட்டுத்தான் கிடப்பான். கண் களில் இச்சைக்கு இசைந்து கொடுத்து வாழ்பவன் மனிதன். அப்படி இசைந்து கொடுத்து வாழ்வதால் கண்ணுக்கு அழகானதெல்லாம் மனிதனுக்கு மயக்கம் கொடுக்க வல்ல தாய் இருக்கின்றது.

புகழ் என்பது ஒரு தூரத்துப் பச்சை. அந்தப் பச்சை மனிதனுக்கு கவர்ச்சியாய் இருக்கும். அந்தக் கவர்ச்சியில் அதை அடைந்துவிடப் பலவித முயற்சிகள் செய்வான் மனிதன். அந்த முயற்சிகளில் கவர்ச்சி மயக்கம் கலந்தே இருக்கிறது. புகழை அடைந்து விட்டாலும், அந்தப் புகழும் ஒருவித மயக்கத்தை மனிதனுக்குக் கொடுக்கிறது. புகழில் மயங்காதவர்களே வாழ்க்கையில் நிதானமாய் செயல்படுவார்கள்.

வயோதிகத்தில்தான் மனிதனுக்குப் பலவித மயக்கங்களின் உண்மை தெரிகிறது. அந்த உண்மைகள் தெரிவதால் அந்த மனிதன் மிக்க விழிப்புணர்ச்சி பெறுகிறான். விழிப்புணர்ச்சி பெறுவதற்குகூட மனிதன் பலவித மயக்கங்களைக் கடந்து பயணப்பட வேண்டி இருக்கிறது.

விளக்கில் எண்ணெய் இருக்கும் வரைக்கும்தான் விளக்கு எரியும். அதேபோல் மனிதனுக்கு ஆசை இருக்கும்

வரைக்கும்தான் வாழ்க்கை ருசிக்கும். ஆசைகள் அத்தனையும் தீர்ந்துவிட்டால் மயக்கங்களும் கூடவே மறைந்துவிடும். பூமி யாருடைய அனுமதியைக் கேட்டும் சுற்றவில்லை. ஆகையால் அது என்றுமே நிற்காது. பூமி நிற்காததால் காலமும் நிற்பதில்லை. நிற்காத காலத்தில் நிலைத்துவிடவே மனிதன் பேராசை கொள்கிறான். மனிதனின் பேராசைக்கெல்லாம் காலம் இடம் கொடுத்து பார்ப்பதில்லை. அப்படி மனிதன் பேராசைப் படும்போது சுயமயக்கம் மனிதனுக்கு அதிகம் இருக்கின்றது.

தான் என்ற அகங்காரத்தை சுய மயக்கமே கொடுக்கிறது. சுய மயக்கம் தெளிந்து போனால், மனிதனுக்கு அகங்காரமும் குறைந்து போகின்றது. அகங்காரம் குறைந்தால் அன்புணர்ச்சி வந்துவிடுகிறது. அன்புணர்ச்சி வந்து விட்டால் வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது. கண்ணாடிப் பொருள் கீழே விழுந்து விட்டால் உடைந்து நொறுங்கி விடும். அதேபோல் மனம் மயக்கத்தில் விழுந்து விட்டால் வாழ்க்கை பத்திரமாய் இருக்காது.

உலகம் மனிதனை மயக்கிக் கொண்டுதான் இருக்கும். அந்த மயக்கத்தில் ஆயுசு அதிகம் கரைந்து விடும். மிச்ச மான காலத்தில் மனிதனை உலகம் புறக்கணித்துவிடும். புறக் கணித்துவிட்ட பிறகு வாழ்க்கை வசந்தம் பெறாது.

ஆடம்பரம் ஒரு மயக்கம். அங்கே எளிமை என்பது இறந்து விடும். ஆடம்பரத்தில் போலித்தனம் குடி கொண்டிருக்கும். எளிமையில் உண்மை குடி கொண்டிருக்கும். போலித்தனமும், உண்மையும் எதிர் எதிர் துருவங்கள். அந்த துருவங்கள் ஒன்றாக எக்காலத்திலும் இணையாது.

வாலிபம் ஒரு மயக்கம். அந்த மயக்கம் வயோதிகத்தில்தான் தெளியும். அழகு ஒரு மயக்கம். அந்த மயக்கம் தன்

முனைப்பைக் கொடுக்கும். அந்தத் தன் முனைப்பு கர்வத்தை வளர்க்கும். அந்தக் கர்வம் வாழ்க்கைப் பாடங்களைப் படிக்கச் சொல்லும்.

காதல் ஒரு மயக்கம். அந்த மயக்கம் காலத்தை அபகரிக்கும். ஏழ்மையில் எந்த மயக்கமும் இருப்பதில்லை. ஆனால் செழுமையில் மயக்கம் இருந்து கொண்டே இருக்கும். அந்த மயக்கம் அகங்காரத்தை வளர்க்கும்.

கற்ற கல்வி மயக்கத்தைக் கொடுப்பதில்லை. அந்தக் கல்வி வாழ்க்கைக்கு தெளிவான பாதை போட்டுக் கொடுக்கிறது. அழகான வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது. அர்த்தமற்ற வாழ்வு அசிங்கமாய் இருக்கிறது. வாழ்க்கையின் பூரணம் பயன் கொடுத்து மறைவதில்தான் இருக்கிறது. பயனில்லாமல் மறையும் வாழ்க்கை பல மயக்கங்களில் விரையம் ஆகி இருக்கும்.

மதியுடன் வாழ்வோம்... மயக்கம் தவிர்ப்போம். ✪

திறமைகள் அங்கீகரிக்கப் பட்டால்தான் ஒளி வீசும். அங்கீகரிக்கபடாத திறமைகள் இருட்டிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உயர்ந்தோர்கள் அங்கீகரித்தால்தான் வாழ்க்கை உயர்வை நோக்கிச் செல்லும். வாழ்வில் உயர்ந்த வர்களின் உழைப்பு சரியாக அங்கீகரிக்கப் பட்டிருக் கிறது. அங்கீகாரம் பெற்ற மனங்களே ஆனந்தத்தில் நிலை பெறுகின்றது.

முழுமையடைந்த திறமையான செயல் அங்கீகாரம் பெற்றால்தான் கௌரவம் பெறுகிறது. எங்கே அங்கீகாரம் மறுக்கப்படுகிறதோ அங்கே குற்றங்களும் உருவாகின்றன. தவறுக்கு அங்கீகாரம் கொடுத்தால் அது சரியென ஆட்சி செய்யத் தொடங்கிவிடும். அங்கீகாரம் என்பது ஊக்கத்தை செயல்பட வைக்கும் எரிபொருள் ஆகும்.

முடியாததை முடிப்பதே சாதனை ஆகும். இந்தச் சாதனை பல அங்கீகாரப் படிகளில் ஏறிவந்ததாகும். யாரும் வெற்றியின் ஏணிப்படிகளை பிறருக்காக வைத்து கொண்டு



காத்திருப்பதில்லை. தனக்கான ஏணிப்படிகளைத் தானே உருவாக்கி கொண்டவர்கள் வெற்றியே அங்கீகரிக்கப்பட்டு நிரந்தரத் தன்மை ஆக்கப்படுகிறது. எதிர்பார்த்த அங்கீகாரம் கிடைக்கவில்லை எனில் மனம் ஏமாந்து சோர்ந்து போகும். துன்பங்கள் அங்கீகரிக்கப்பட்டால் வாழ்வே பெரும் துயரம் ஆகிவிடும். மகிழ்ச்சிகள் அங்கீகரிக்கப்பட்டால் வாழ்வே பெரும் உற்சாகமாக மாறிவிடும். அங்கீகாரம்தான் மனநிறைவைக் கொடுக்கிறது.

சிலர் சிலரை வேண்டும் என்றே அங்கீகரிப்பதில்லை. அவர்களை வேண்டும் என்றே புறக்கணித்துவிடுகிறார்கள். புறக்கணிப்பு என்பது ஒரு வேதனையான விஷயம். புறக் கணிப்பு மிகுந்த மனவலியை ஏற்படுத்தக் கூடியது. சிலர் பலரின் புறக்கணிப்பை மீறித் தனது தனித்திறமையால் ஒரு நாள் அங்கீகரிக்கப்பட்டு விடுகிறார்கள். இந்தப் பூமியில் அங்கீ காரம் என்பது எளிதாக கிடைத்துவிடாது. பல காலங்கள் காத்திருந்தாலே அங்கீகாரம் லேசாக வந்து எட்டிப் பார்க்கும்.

உலகை வெற்றி கொண்டவன் கல்லறை என்றும் உறங்குவதில்லை. ஏளனப்படுத்தப்பட்டவர்கள் சாதனைச் சிகரம் ஏறி வெற்றிக் கொடி பறக்கவிட்டது, பூமியில் நிறைய உண்டு. நெஞ்சமெல்லாம் நேசம் கெண்டவர்கள் வாழ்க்கை வாசம் பெறாமல் போவதில்லை. உயர்ந்த இடத்தில் இருந் தால்தான் உலகத்திற்கு கண் தெரியும். தாழ்ந்து கிடந்தால் மிதியடி போல உபயோகபடுத்திவிட்டு குப்பையில் உலகம் வீசிவிடும்.

அச்சங்கள் அகன்றால்தான் ஆசைபட்டதை அடைய துணிவு பிறக்கும். துணிவுதான் தன்னம்பிக்கையை வளர்க்கும். வளர்ந்த தன்னம்பிக்கைதான் வளர்ச்சிக்கான பாதைகளைப் போட்டுத்தரும். உண்மையான வெற்றிகளைப் பெற ஊக்கம் தொடர்ந்து செயல்பட வேண்டும். ஊக்கத்திற்கு அங்கீகாரம்

உணவாய் இருக்க வேண்டும். வெற்றியின் நிழலில்தான் ஆன்மா இளைப்பாறும்.

புறக்கணிக்கப்பட்ட மனிதர்கள் மனதால் பொசுங்கிப் போவார்கள். புறக்கணிப்பு என்பது ஏற்றுக் கொள்ளாதது ஆகும். யாரும் யாரையும் அத்தனை எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. காரணம் ஏற்றுக் கொள்ள யாருக்கும் எளிதில் மனம் பிறப்பதில்லை. எங்கே புறக்கணிப்பு நிகழ் கிறதோ அங்கே மரியாதையும் இல்லை. மரியாதை தராத மனிதர்களை மண்டியிடச் செய்வதே தனி மனிதனின் தனித் துவத்துக்கு கிடைத்த அங்கீகாரம்.

ஏமாற்றுக்காரர்களையும், வஞ்சகர்களையும், மோசடிப் பேர் வழியையும் புறக்கணிக்க வேண்டும். அவர்களைப் புறக் கணிக்காவிட்டால் வாழ்க்கை நஷ்டமடைந்துவிடும். நல்ல மனிதர்களின் தனித் திறமைகளை அங்கீகரிக்க வேண்டும். அப்படி அங்கீகரித்தால்தான் உண்மைக்கு நம்பிக்கை பிறக்கும். பொய்மை எங்கும் அங்கீகரிக்கபடுவதில்லை. அப்படி அது அங்கீகரிக்கப்பட்டால், ஏதோ ஒரு ஆதாயத்திற்குதான் அது அங்கீகாரம் பெறுகிறது.

இளமை முதுமையை அங்கீகரிப்பதில்லை. முதுமை எங்கேயும் புறக்கணிக்கப்படுகிறது. காரணம் இளமையால் பெறும் லாபங்களை விட, முதுமையிடம் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாமல் முதுமை எங்கேயும் புறக்கணிக்கப் படுகிறது.

நல்லவைகளை அங்கீகரிப்போம்
தீயவைகளை என்றும் புறக்கணிப்போம். ✪

6 சிந்தனையும் மனதும்

காலம் காலமாக மனிதன் சிந்தித்துக் கொண்டிருக்கிறான். மனிதன் காலம் காலமாக சிந்தித்ததின் விளைவே இன்றைய உலகத்தின் உருவாக்கம். சிந்திக்காமல் மனிதனால் இருக்க முடியாது. சிந்திக்கத் தவறுபவர்கள்தான் வாழ்க்கையின் தவறுகளுக்குக் காரணமாய் இருக்கிறார்கள். சிந்திக்க சிந்திக்கத்தான் மனிதனுக்கு உலகம் தெரியத் தொடங்குகிறது.

பல குழப்பத்தின் கலக்கத்திற்கு சிந்தனையே தெளிவைக் கொடுக்கிறது. மனிதன் எந்த மனித இனத்திலும் பிறக்கலாம். பிறக்கும்போது கடும் வறுமையும் கொண்டிருக்கலாம். ஆனால் சரியான சிந்தனை கொண்ட மனிதன் சாதனையின் படிக்கட்டுகளில் ஏறித்தான் மறைவான். மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் சிந்தனை சொந்தமானது. நல்ல சிந்தனை நல்ல மனத்தில் இருந்தே பிறக்கின்றது. நல்ல சிந்தனை நல்ல செயல்களைச் செய்கிறது.

ஏன், எதற்கு எப்படி என்ற கேள்விகள் மனிதன் மனதை ஆட்டுவிக்கிறது. அப்படி ஆட்டுவிக்கும்போது மனிதனுக்கு சிந்தனைகள் தொடங்குகின்றது. அவ்வாறு சிந்திக்கும்போது பல பதில்களும் சிந்தனையின் விளைவாக மனிதனுக்குக் கிடைக்கின்றது.

மனித சிந்தனைகளே மனித வாழ்க்கையை அடிப்படையில் இருந்து கட்டமைத்து வழி நடத்திக் கொண்டிருக்கிறது.